ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2148/8 - 2019 නොවැම්බර් මස 04 වැනි සඳුදා - 2019.11.04
*2148/8 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KEG/LAN/AQUIS/A3/1/84.
அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2013/HW/580.

கேகாலை பிரதேச செயலகப் பிரிவில், கேகாலை துணை வீதியில் (11 ஆம் கட்டம்) 0+420 கி. மீ. இடத்தில் தற்காப்பு மதிலொன்றை நிர்மாணித்தல் மற்றும் நுழைவு வீதியை வழங்குவதற்காக ரதாகொலஹெல கும்புர எனும் காணியை, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 15ஈ கொண்ட கொலஹெல கிராம அலுவலர் பிரிவில், கொலஹெல (கேகாலை நகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, கேகாலை நில அளவை அத்தியட்சகரின் ஆ. வ. கே. 3567 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 02 காணித்துண்டுகளின் விபரங்கள் :

***ஆ. வ. ப. கே 3567 வரைபடம்***

***01. துண்டு இல. 01***

காணியின் பெயர் : ரதாகொலஹெல கும்புர; உரிமை கோருவோரின் பெயர் மற்றும் முகவரி : காணி எடுத்தற் சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப உரிமை கோருவோர் கேகாலை பிரதான வீதியில் இல. 171 இல் வசிக்கும் ஜீ. என். ஜே. அம்பேவர்தன, கேகாலை எக்கிரியகல, கெப்பல, இல. பி 92 இல் வசிக்கும் டி. எச். எம். ஏ. எம். விஜேசிங்ஹ மற்றும் கேகாலை, வைத்தியசாலை சந்தி, பண்டாரநாயக்க மாவத்தை, இல. 292 இல் வசிக்கும் எச். எம். பீ. டீ. டிஷான் விஜேசிங்ஹ, காணி எடுத்தல் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக (சதுர மீற்றர் 248); விஸ்தீரணம் : 0.0248 ஹெக்டயார்.

***02. துண்டு இல. 02***

காணியின் பெயர் : ரதாகொலஹெல கும்புர; உரிமை கோருவோரின் பெயர் மற்றும் முகவரி : ஆ. வ. ப. 920 இல் காணித் துண்டு இலக்கம் இடப்படாத வீதியொன்றின் ஒரு பகுதியாகும். கேகாலை துணை வீதியில் 11 ஆம் கட்டத்தில் தற்காப்பு மதிலை நிர்மாணித்தல் மற்றும் நுழைவு வீதிக்குத் தேவையாக உள்ளது. (9 சதுர மீற்றர்); விஸ்தீரணம் : 0.0009 ஹெக்டயார்.

1A - G 31409 - 32 (2019/11)
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***நஷ்ட ஈடு பரிசீலனைத் திகதி* :**

ஆ. வ. கே. 3567 வரைபடத்தில் கே. 01 மற்றும் 02 ஆம் இலக்கங்களிற்கு திசெம்பர் 16 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் மற்றும் நேரங்களில் கேகாலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எஸ். நிஷான்த,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அலுவலர்,
கேகாலை.

பிரதேச செயலகம்,
கேகாலை,
2019, ஒற்றோபர் 31.

11 - 1249